Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 26, 2025

புதன்கிழமை 26, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 187 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## மேட்ச் பிக்சிங்: படேலுக்கு சிறை



2024 லெஜண்ட்ஸ் லீக்கில் கண்டி சாம்ப் ஆர்மியின் மேலாளரான இந்தியப் பிரஜையான ஆகாஷ் (யோகி) படேலுக்கு மேட்ச் பிக்சிங் முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள மாத்தளை மேல் நீதிமன்றம் அவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையை செவ்வாய்க்கிழமை (25) விதித்துள்ளது.

தொடர்ச்சி P2

## கச்சத்தீவு வழக்கு: செப்.15 விசாரணை




கச்சத்தீவை மீட்கக்கோரிய வழக்கு ஐந்து ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் உச்ச நீதிமன்றத்தில் வெவ்வாய்க்கிழமை(25) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தியா, இலங்கை இடையான 1974 மற்றும் 1976ம் ஆண்டு ஒப்பந்தப்படி கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது செல்லாது என அறிவிக்கக் கோரி, கடந்த 2008ம் ஆண்டு அப்போதைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.தி.மு.க) பொதுச்செயலாளர் ஜெ.ஜெயலலிதாவும், அதேபோல, ஏ.கே.செல்வராஜ் என்பவர் சார்பிலும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கில் கடந்த 2009 ஜனவரி 5ஆம் திகதியன்று உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது. பின்னர் வழக்கு விசாரணை விரைந்து நடைபெறாததால்,வழக்கை விரைந்து விசாரிக்கக்கோரிக் கடந்த 2012 செப்டம்பர் 18ம் திகதி ஜெயலலிதா சார்பில் மீண்டும் ஒரு மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அதில், தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் இந்த மனுவைத் தாக்கல் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த வழக்கைப் பொறுத்தவரை ஜெயலலிதா 3ஆவது முறையாகக் கடந்த 2011ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றதும், சட்டப்பேரவையில் அறிவித்தபடி, கச்சத்தீவு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் வைத்துள்ள தமிழக அரசின் வருவாய்த் துறையும் இந்த வழக்கில் பிரதிவாதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

## தேசபந்துவை நீக்க



# பிரேரணை கையளிப்பு


பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணை முன்வைப்பதற்கான தீர்மானம் பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவிடம் செவ்வாய்க்கிழமை (25) கையளிக்கப்பட்டது.

இதில், 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

2002ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கை முறை) சட்டத்தின் 5ஆவது பிரிவுக்கு அமைய இந்தத் தீர்மானம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களும், பிரதியமைச்சர்களுமான மஹிந்த ஜயசிங்க, எரங்க குணசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான (கலாநிதி) கௌசல்யா ஆரியரத்ன மற்றும் (சட்டத்தரணி) உபுல் அபேவிக்ரம ஆகியோர் இந்தப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்தனர்.

## "நாம் ஆதரவு"



தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அன்று போலவே இன்றும் எமது ஆதரவை வழங்குவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதான தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளர்களுடன் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த அரசாங்கத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தி தான், தேசபந்து தென்னகோனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தது. அன்று அரசியலமைப்பு பேரவையில் அவருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியே வாக்களித்தது. அரசியலமைப்பை மீறியே தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

இந்த அரசியலமைப்பை மீறிய நடவடிக்கைக்கு முன்னாள் ஜனாதிபதியைப் போலவே சபாநாயகரும் பொறுப்புக் கூற வேண்டும். அரசியலமைப்பு பேரவையில் நடந்தவற்றை முற்றிலுமாகத் திரிவுபடுத்தி, மீயுயர் சட்டத்தை அப்பட்டமாக மீறிய வகையிலயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அன்று தேசபந்து தென்னகோனை அரசியலமைப்பை மீறி, உயரிய சட்டத்தைக் காலில் போட்டு மிதித்து, சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட போது, இன்று கூச்சல் போடுபவர்கள் அன்று மௌனம் காத்தனர்.

இவ்வாறு தாமதமாகவேனும் இந்த அரசாங்கம் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதற்கு பூரண ஆதரவை வழங்குவேன்.

## யாழ்.கூட்டத்தில் அமளி: வெளியேறினார் சிறீதரன்

நிதர்ஷன் வினோத்

தனிப்பட்ட அரசியல் விவகாரங்கள் மற்றும் தனிநபர் அவதூறுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனுக்கு இல்லைமையை சுட்டிக்காட்டிய இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

தொடர்ச்சி P2



## "சிவன் பூஜையில் கரடி புகுந்தது"



மோசமான செயற்பாடுகள் மூலம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைப் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பியுள்ளார். இனிவரும் காலங்களில் தலைவருக்குரிய அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவேன் என்று அமைச்சரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சரும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றது.

கூட்டம் முடிந்தபின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

"வரவு- செலவுத் திட்டக் கூட்டத்தொடர் முடிவடைந்துள்ள நிலையில், யாழ். மாவட்டத்துக்குப் பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு தொடர்பில் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதற்காகவே ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## "நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்று"

நிதர்ஷன் வினோத்

இலங்கையில் தமிழர்கள் மீதான இன அழிப்பு யுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை ஆயுதப்படையின் முன்னாள் தலைவர் சவேந்திர சில்வா, கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட, இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் இலங்கை இராணுவத்தின் சார்பாக செயற்பட்ட துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது பிரித்தானியா விதித்துள்ள தடை ஈழத்தமிழர்களின் நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்று எனவும், அந்த அறிவிப்பைத் தாம் வரவேற்பதாகவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்துக்கு கடிதம்ஒன்றைஅனுப்பிவைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இரு நாட்டு மீனவர்கள் வவுனியாவில் பேச்சு

நிதர்ஷன் வினோத்

இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய மீனவர் குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கமைய வவுனியாவில், புதன்கிழமை (26) இலங்கை- இந்திய மீனவர் பேச்சு வார்த்தை நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜேசுராஜா, ஆல்வின், சகாயம், ஜஸ்டின், ஜெர்மனியஸ் ஆகியோர் கொண்ட 5 பேர் கொண்ட குழு விமான மூலம் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை செவ்வாய்க்கிழமை (25) வந்தடைந்தனர்.

இதில் ஏற்கனவே நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் இங்கு இருப்பதால் அவருடன் சேர்ந்து ஆறு

தொடர்ச்சி P2

## "கிழக்குத் தமிழர்கள் தத்தளிக்கின்றனர்"

வ.சக்தி

கிழக்கு தமிழர்களுக்கென்று தலைமைத்துவம் இல்லாத காரணத்தினால் கிழக்குத் தமிழர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள் என தெரிவித்துள்ள நாம் தமிழர் சமூக சேவை ஒன்றியத்தின் செயலாளர் கோபாலன் பிரசாத், எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலிலே கிழக்கு தமிழர் கூட்டமைப்புக்கு எமது பூரண ஒத்துழைப்பினை வழங்குவது என தீர்மானித்துள்ளோம் என்றார்.

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளியில் ஞாயிற்றுக்கிழமை(23) மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண மக்களுக்கென பல தலைவர்கள் இருக்கின்றனர், பல அரசியல் கட்சிகளும் இருக்கின்றனர். அந்த தலைவர்களாலும் அந்த கட்சிகளாலும், அந்த மண்ணும், மக்களும், பாதுகாக்கப்படுகின்றார்கள்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கச்சத்தீவு வழக்கு: செப்.15 விசாரணை

அதேபோல, கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டதால் தொடர்கதையாகி வரும் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்தியப் பிரதமருக்கு ஜெயலலிதா எழுதிய கடிதங்களும் மனுவோடு இணைக்கப்பட்டன.

இதனிடையே கடந்த 21/09/ 2013ல் கச்சத்தீவு இந்தியாவுக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் அடங்கிய ஆவணங்களைத் தமிழக அரசின் வருவாய்த்துறை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

இதனையடுத்து இந்த வழக்கு கடைசியாக கடந்த 2020ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இதனையடுத்து 5 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வில், இந்த வழக்கு விசாரணைக்கு செவ்வாய்க்கிழமை(25) பட்டியலிடப்பட்டுள்ளது.

# யாழ்.கூட்டத்தில் அமளி: வெளியேறினார் சிறீதரன்

யாழ். ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தனிப்பட்ட விடயத்தை முன்னிறுத்தி இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதால் சில நிமிடங்கள் அமளிதுமளி செவ்வாய்க்கிழமை (25) ஏற்பட்டது.

வலி. வடக்கில் முன்னெடுக்கப்படும் மின் இணைப்பு விடயம் தொடர்பாக விவாதம் முன்வைக்கப்பட்ட போது, ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினரான இளங்குமரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் அவர்களது தனிப்பட்ட விடயங்களை முன்னிறுத்தியதாகமாறியது.

குறிப்பாக இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றவரது காதல் விடயங்கள், மோசடி மற்றும் பெண்களை ஏமாற்றியமை, நிதி மோசடிகள் உள்ளிட்ட பல விடயங்களை முன்னிறுத்தி நூற்றுக்கணக்கான அதிகாரிகள் முன்னிலையில் குடும்பச் சண்டையிட்டனர்.

இந்நிலையில், குறித்த விவாதத்தை இடை நிறுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஒருங்கிணைப்பு குழு தலைவரிடம் வலியுறுத்தினார்.



ஆனால் ஒருங்கிணைப்பு குழு தலைவர் குறித்த இருவரையும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருந்தார்.

ஒருங்கிணைப்பு குழு தலைவரின் ஆளுமையற்ற நிலையை அவதானித்த பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் கூட்டத்தை விட்டு வெளியேறி சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “சிவன் பூஜையில் கரடி புகுந்தது”

மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்படவிருந்த இக்கூட்டத்தில் சிவன் பூஜையில் கரடி புகுந்தது போல சம்பவங்களும் இடம்பெற்றன.

தொல்லை தாங்க முடியாமல் எம்.பியொருவர் வெளியேறிச் சென்றுள்ளார். மேலும் சில அதிகாரிகள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

எவருடைய பேச்சுக்கும் கட்டுப்படாத நபரொருவரால் தான் இப்படி நடந்தது. பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மோசமாக நடந்துகொண்டார். தனக்குள்ள தனிப்பட்ட பிரச்சினை காரணமாக சம்பந்தமில்லாத விடயங்களைக்கூட அவர் குறிப்பிட்டுள்ளார்.

எத்தடை வரினும் யாழ்.மாவட்டத்திற்குரிய அபிவிருத்தி திட்டங்கள் தொடரும். அவை உரிய வகையில் முன்னெடுக்கப்படும். ஒருங்கிணைப்புக் குழு தலைவருக்குள்ள அதிகாரம் இனி முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வரும். நாம் இது பற்றி மக்களிடமே முறையிடுகின்றோம். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்” என்றார்.

## பிரிட்டனின் தடை
# “ஆபத்தை விளைவிக்கும்”

மனித உரிமைகள் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பிரிட்டன் விதித்த தடையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வன்மையாகக் கண்டித்துள்ளார்.

“மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒரே நாட்டில் நல்லிணக்கத்துடன் வாழவும் தங்கள் உயிரைப் பணயம் வைத்த போர்வீரர்களுக்கு மட்டுமே தடைகள் பொருந்தும். விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்திற்கு எதிராக எந்தத் தடைகளும் இல்லை. இது பயங்கரவாதத்தின் சார்பாக செயல்படும் பல்வேறு குழுக்களின் அழுத்தத்தின் விளைவாகும்.” என்றும் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது நீதி அல்ல என்பதையும், இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரம் நமது தேசத்தின் நல்லிணக்கத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் கடுமையான மற்றும் நேரடியான முடிவுகளின் விளைவாகும் என்பதையும் வடக்கு மற்றும் தெற்கு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது



இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களைக் கருத்தில் கொண்டு, முன்னாள் பாதுகாப்பு படைகளின் பிரதானியும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் த ஃப்லீட் வசந்த கரன்னாகொட, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகியோரும் பிரிட்டன் தடையை திங்கட்கிழமை (24) விதித்துள்ளது.

> **தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான கருணா அம்மான் என்றழைக்கப்படுகின்ற விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் பிரிட்டன் தடை விதித்துள்ளது. அதற்கமைய இவர்கள் நால்வரும் ஐக்கிய இராச்சியத்திற்கான பயணங்களை மேற்கொள்ள, ஐக்கிய இராச்சியத்திற்குள் சொத்துக்களை சேகரித்து வைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது**

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான கருணா அம்மான் என்றழைக்கப்படுகின்ற விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் பிரிட்டன் தடை விதித்துள்ளது.

அதற்கமைய இவர்கள் நால்வரும் ஐக்கிய இராச்சியத்திற்கான பயணங்களை மேற்கொள்ள, ஐக்கிய இராச்சியத்திற்குள் சொத்துக்களை சேகரித்து வைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## வவுணதீவு சம்பவம்:
# சஹ்ரான் குழுவில் 4 பேரை ஆஜர்படுத்தவும்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - வவுணதீவில் இரு பொலிஸாரை வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்த, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் குழுவைச் சேர்ந்த நான்கு பேரையும் எதிர்வரும் ஜூன் 25 ம் திகதி ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி திங்கட்கிழமை (24) உத்தரவிட்டார்.

வவுணதீவு வலையிறவு பாலத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் சாவடியில் 2018ம் ஆண்டு 29 ஆம் திகதி இரவு கடமையில் இருந்த பொலிஸ் சார்ஜன்ட் நிரோசன் இந்திர பிரசன்னா, பொலிஸ் கான்ஸ்டபிள் தினேஷ் ஆகிய இரு பொலிஸார் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் கொலை செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான ஐ.எஸ்.ஐ.எஸ் சேர்ந்த சஹ்ரானி குழுவைச் சேர்ந்த கபூர் மாமா என அழைக்கப்படும் சஹ்ரானின் சாரதியான முகமது சர்ப் ஆதம்லெப்பை, மில்ஹான், பிரதோஸ். நில்காம் ஆகிய 4 பேரையும் சிஐடியினர் கைது செய்தனர்.

இதையடுத்து, 4 பேருக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர் இந்த வழக்கு திங்கட்கிழமை(24) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பில் இருந்து இந்த நால்வரும் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் அழைத்துவரடப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

# மேட்ச் பிக்சிங்: படேலுக்கு சிறை

கண்டி- பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற லெஜண்ட்ஸ் லீக் போட்டியின் போது போட்டிகளை பிக்சிங் செய்வதற்காக இலங்கையின் தலைமை கிரிக்கெட் தேர்வாளர் உபுல் தரங்காவை அணுகியதற்காக யோகி) படேலுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சிறைத்தண்டனைக்கு கூடுதலாக, படேலுக்கு ரூ. 85 மில்லியன் அபராதம் விதிக்கப்பட்டது மற்றும் அவதூறுக்கு இழப்பீடாக உபுல் தரங்காவுக்கு ரூ. 2 மில்லியன் வழங்க உத்தரவிடப்பட்டது.

விரிவான விசாரணை மற்றும் சாட்சிகளின் சாட்சியங்களைத் தொடர்ந்து, படேல் இல்லாத நிலையில் விசாரணை தொடர்ந்தது. முந்தைய விசாரணையின் போது, பட்டேல் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிவிட்டார், அவர் கடல் வழியாக நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என்பது விசாரணையில் தெரியவந்தது.

நீதிமன்றம் விதித்த பயணத் தடை இருந்தபோதிலும், படேல் எப்படி நாட்டை விட்டு வெளியேறினார் என்பது குறித்து முழு விசாரணை நடத்தவும் சிஐடிக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# “நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்று”

எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வுகளுக்கு முன்னதாக, இனப்படுகொலையின் பங்குதாரர்களான நால்வர் மீது பிரித்தானிய அரசு விதித்துள்ள பயணத்தடை, காலம் தாழ்த்தியாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மீள அரும்பச் செய்திருக்கிறது.

இலங்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் மீது பேரினவாத அரசு வலிந்து நடாத்திய போரின்போது மோசமான மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட இந்த நான்கு பேர் மீதும் பிரித்தானிய அரசு விதித்திருக்கும் தடையையும், சொத்து முடக்க அறிவிப்பையும், சர்வதேச நீதி கோரும் பயணத்தில் தமக்குக் கிடைத்திருக்கும் ஒரு சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றாகவே ஈழத்தமிழர்கள் பார்க்கிறார்கள்.

எண்பது வருடங்களுக்கு மேலாகக் கேட்பாரற்று படுகொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசிய இனத்தின் எண்ணங்களுக்கும் இறந்துபோன ஆத்மாக்களுக்கும் இந்தத் தடை அறிவிப்பு தமக்கான நீதியின் கதவு திறக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது. காலனித்துவ ஆட்சி முடிவில், சுதேசிகளான தமிழர்களின் இறைமையைப் பிறிதோர் இனத்தவரிடம் ஒப்படைத்துச் சென்றமை வரலாற்றுத் தவறு என்பதை உலகம் இப்போதாவது உணரத்தலைப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றுள்ளது.

# இரு நாட்டு மீனவர்கள் வவுனியாவில் பேச்சு

பேர் கொண்ட குழு வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் இரு நாட்டு மீனவர்கள் சந்திப்பு புதன்கிழமை (26) காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ளது

இலங்கை மீனவர்கள் சார்பில் சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), மரிய ராசா (முல்லைத்தீவு), ஆலம் (மன்னார்), பிரான்சிஸ் (கிளிநொச்சி), அந்தோணி பிள்ளை (கிளிநொச்சி), சங்கர் (மன்னார்) ராமச்சந்திரன் (யாழ்ப்பாணம்), அன்ன ராசா (யாழ்ப்பாணம்), வர்ண குல சிங்கம் (யாழ்ப்பாணம்) உள்ளிட்ட 12 பேர் கொண்ட குழு இந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொள்கின்றனர்.

தமிழக மீனவர்கள் முதல்கட்டமாக ஒரு மாத காலம் இலங்கை கடற்பரப்புக்குள் இழுவை மடி மீன் பிடியை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த முதல் கட்ட மீனவர்களுக்கு இடையேயான மீனவர்களால் இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு எட்டப்படுவது தொடர்பாக முதல் கட்டமாக இலங்கை இந்திய மீனவர்களிடையே மீனவர்களின் சொந்த முயற்சியில் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை (18) முடிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “கிழக்குத் தமிழர்கள் தத்தளிக்கின்றனர்”

அதேபோல, மலைக தமிழ்களுக்கும் தலைவர்கள் இருந்து செயற்பட்டு வருகின்றார்கள். ஆனால், கிழக்கு தமிழர்களுக்கென்று தலைமைத்துவம் இல்லாத காரணத்தினால் கிழக்குத் தமிழர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றார்.

அதன் அடிப்படையிலேயே கிழக்குத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காகத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவனேசத்துரை சந்திரகாந்தனும், முற்போக்கு தமிழர் கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் வியாழேந்திரனும் இணைந்திருக்கின்றார்கள். இந்த இணைவு உண்மையில் கிழக்கு மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது என்றார்.

இந்த இணைவினூடாக நடைபெறப் போகின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அனைவரும் படகு சின்னத்தை ஆதரித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற தமிழர்களைக் கரைசேர்ப்பதற்கு நிச்சயமாக ஆதரவு வழங்குவார்கள் என நான் நினைக்கின்றேன் என்றார்.

‘நாம் தமிழர் என்ற அமைப்பை’ முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே தான் நாங்கள் இதனை ஆரம்பித்தோம். அன்றிலிருந்து எமது அமைப்பு வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு என்று பல போராட்டங்களையும், சேவைகளையும், செய்து வருகின்றோம். இந்த நிலையில்தான் கிழக்கு தமிழர்களைப் பாதுகாப்பதற்கு என்றே இங்கு யாரும் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகையால்தான் கிழக்குத் தலைவர்கள் இணைந்திருக்கின்றார்கள் என்றார்.

# வியாழேந்திரன் கைது

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று செவ்வாய்க்கிழமை (25) கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், கைது செய்யப்பட்ட வியாழேந்திரனை கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

















# காசநோய் விழிப்புணர்வு நடைபவனி

■ வி.ரி. சகாதேவராஜா

உலக காச நோய் தினத்தையொட்டி கல்முனை ஆதார வைத்தியசாலை மற்றும் கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் இணைந்து , விழிப்புணர்வு நடைபவனியொன்றை திங்கட்கிழமை (24) அன்று முன்னெடுத்தனர்.

இந்நிகழ்வானது கல்முனை ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நடைபவனியானது கல்முனை ஆதார வைத்தியசாலை முன்றலில் இருந்து ஆரம்பித்து பிரதான வீதி ஊடாக கல்முனை பொதுச் சந்தையை அடைந்து அங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம் பெற்றன.

கல்முனை ஆதரவைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவில் காசநோய்க்கான சளி பரிசோதனை 2% மாக உயர்த்தப்பட்டுள்ளது என்பது சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வின் இதில் போது கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ந. ரமேஷ் உட்பட வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், நிர்வாக கிளையினர், சுகாதார உதவியாளர்கள் மற்றும் சுத்திகரிப்பு ஊழியர்கள் நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## மு.காவுடன்

# “திரைமறைவில் ஒப்பந்தம் இல்லை”

■ வ.சக்தி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் எந்தவித ஒப்பந்தங்களும் திரைமறைவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்துள்ளார்.



தமிழரசுக் கட்சிக்கு அளிக்கப்படும் வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதற்கு வழங்கப்படும் என வதந்திகள் கூறப்படுகின்றன. இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கூட சில கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார். இது உண்மையற்ற விடயமாகும் என்றார்.

நாங்கள் தனித்து நின்று போட்டியிடுவது என்றும் விரும்பினால் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் இணைந்து பயணிக்கலாம் என்றும் மத்தியக் குழுக் கூட்டத்தில் முடிவெடுத்திருந்தோம். அதற்கு அப்பால் ஆட்சி அமைப்பதற்குத் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து கொள்ளலாம் எனவும் நாங்கள் முடிவெடுத்திருந்தோமே தவிர எந்தவிதமான ஒப்பந்தங்களும் எந்த விதமான திரைமறைவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றார்.

மட்டக்களப்பில் அவரது ாரியாலயத்தில் திங்கட்கிழமை(24) மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நடைபெற இருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான தேர்தலாக நாம் பார்க்கின்றோம். ஏனெனில் கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு தவிர்ந்த பல மாவட்டங்களிலும் பல்வேறு கட்சிகளுக்கும் மக்கள் வாக்களித்து தமிழ்த் தேசியம் சம்பந்தமான விடயங்களில் பல்வேறு பேசு பொருளாக இருக்கிறது. முக்கியமாக இந்த விடயத்திலே தமிழ் மக்கள் மிகத் தெளிவாகச் சிந்தித்து தமிழரசு கட்சிக்குத் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற ஊழலற்ற மற்றும் வன்முறையற்ற கட்சியாகப் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும். எனவே மக்களின் ஜனநாயக ஆயுதமான வாக்குரிமையைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் தமிழ்த் தேசியத்தை உலகெங்கும் தெளிவாக எடுத்துச் செல்லக்கூடிய தேவை இருக்கின்றது. கடந்த தேர்தலில் பல மாவட்டங்களிலும் மாற்றங்களை விரும்பி தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கிய வாக்குகள் பேசுபொருளாக இருக்கிறது.

தமிழ்த் தேசியத்தின் பால் பற்று கொண்டு தமிழரசி கட்சிக்கு மிக அதிகளவான வாக்குகளைக் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வழங்கியிருக்கிறார்கள் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசு கட்சி பாரிய வெற்றியைப் பெற்றிருக்கின்றது. இதன்மூலம் தமிழரசுக் கட்சி ஒரு பாரிய வெற்றியை எட்டி இருக்கிறது.

புதிதாக கிழக்கு தமிழர் கூட்டமைப்பு என்ற ஒன்று உருவாக்கப்பட்டு இருக்கிறது. கடந்த காலத்தில் இருந்த அரசாங்கங்களுடன் பேரினவாத சக்திகளுடன் ஒன்றிணைந்து செயல்பட்டவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்தவர்கள், தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டைக் குழைப்பதற்காகப் பேரினவாத சக்திகளின் ஊடாக இவ்வாறான கூட்டமைப்புகள் நிரப்பப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் மிகத் தெளிவாகச் சிந்தித்து செயல்பட வேண்டும் என்றார்.

# முச்சக்கர வண்டி மோதி குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் மீது முச்சக்கர வண்டி மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(24) மாலை இடம்பெற்றுள்ளது.

நாவற்குழி, புதிய குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான அந்தோணி றில்மன் டெனிஸ் (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நாவற்குழி - பூநகரி வீதி வழியாக சைக்கிளில் 10 மாதக் குழந்தையை முன் கூடையில் இருத்திச் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வேகமாக வந்த முச்சக்கர வண்டி சைக்கிள் மீது மோதியுள்ளது. இதன்போது குழந்தை தூக்கி வீசப்பட்ட நிலையில் சிறு காயம் ஏற்பட்ட நிலையில் உயிர் தப்பித்தது.

தந்தை படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், திங்கட்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# கனடாவுக்கு தப்ப முயன்ற 11 பேர் கைது

■ டி.கே.ஜி.கபில




மோசடியான கனேடிய விசாகளைப் பயன்படுத்தி கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற 11 இலங்கையர்களும், அவர்களை விமான நிலையத்திற்கு அழைத்து வந்த ஒரு தரகரும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடிவரவுத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவுக்கு தப்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த 11 இலங்கையர்களும் 35 முதல் 40 வயதுக்கு உட்பட்ட கொழும்பு, களுத்துறை, பதுளை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. இவர்கள் அரசாங்க ஊழியர்கள், தொழிலதிபர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சமீபத்தில் நாடு திரும்பியவர்கள் என சாரணைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது.

துபாய்க்கு புறப்படும் ஸ்ரீலங்கன்எயார்லைன்ஸ் விமானத்தில் UL-225 ஏறுவதற்காக அவர்கள் திங்கட்கிழமை(24) மாலை 6.40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இந்த விமானத்தில் துபாய் சென்று அங்கிருந்து கனடாவின் டொராண்டோ செல்ல திட்டமிட்டிருந்தனர் என்பதும் விசாரணைகள் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

## இலங்கை-சீன நட்புறவு சங்கத்தின்

# தலைவராக பிமல் தெரிவு



பத்தாவது பாராளுமன்றத்தின் இலங்கை-சீன நட்புறவு சங்கத்தின் தலைவர் பதவிக்கு சபை முதல்வரும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை - சீன பாராளுமன்ற நட்புறவு சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (21) அன்று சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போதே இத் தெரிவு இடம்பெற்றது. இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் (Qi Zhenhong) இதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அத்துடன், இலங்கை-சீன பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராகப் பாராளுமன்ற உறுப்பினர் (சட்டத்தரணி) லக்மாலி ஹேமச்சந்திர தெரிவுசெய்யப்பட்டார்.

# மலசலக்கூடத்தில் உணவு தயாரிப்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு செங்கலடி பொது சுகாதாரப் பிரிவிலுள்ள உணவகம் ஒன்றில், மலசலக்கூடத்தில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற முறையில் உணவு தயாரித்து விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு ஒரு மாதகால சிறைத் தண்டனையும் 60 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் திங்கட்கிழமை (24) உத்தரவிட்டார்.

**“ வீதி ஓரத்தில் கொள்கலனில் அமைக்கப்பட்டுள்ள இரு உணவகத்தில் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற உணவுகளை விற்பனை செய்த இரு கடைகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்**

குறித்த பிரதேசத்திலுள்ள உணவகங்களை சம்பவ தினமான திங்கட்கிழமை (24) பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகள் முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர் இதன் போது ஒரு உணவகத்தில் மலசலக்கூடத்தில் உணவு தயாரித்து விற்பனை செய்து வந்ததைக் கண்டுபிடித்து அந்த உணவக உரிமையாளரைக் கைது செய்தனர்.

இதனையடுத்து குறித்த உணவக உரிமையாளரை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இதையடுத்து அவரை ஒரு மாத காலம் சிறையில் அடைக்குமாறும் 60 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அருகில் வீதி ஓரத்தில் கொள்கலனில் அமைக்கப்பட்டுள்ள இரு உணவகத்தில் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற உணவுகளை விற்பனை செய்த இரு கடைகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# சின்ன காதலியை கடத்திய பெரிய காதலன் கைது

■ சுமனசிறி குணதிலக்க

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெதிகும்புர கஹம்பான பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமியைக் கடத்திச் சென்ற 33 வயதுடைய ஒருவர் திங்கட்கிழமை (24) அன்று மொனராகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் குறித்த சிறுமியுடன் காதல் உறவில் ஈடுபட்டு வந்த நிலையில், சில நாட்களுக்கு முன்பு சிறுமியை எம்பிலிப்பிட்டிய பகுதிக்குக் கடத்திச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக சிறுமியின் தாயார் பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, இருவரும் எம்பிலிபிட்டியவிலிருந்து மொனராகலைக்கு வரும் பேருந்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபரை மொனராகலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சிறுமி வைத்திய பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குட்டித் தேர்தல் பிரசாரத்தில் சூடுபிடிக்கும் பிரிட்டனின் தடை

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது, மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாகத் தெரிவித்து நால்வருக்கு எதிராக பிரிட்டன், திங்கட்கிழமை (24) தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் த ஃப்லீட் வசந்த கரன்னாகொட, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய, மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான கருணா அம்மான் என்றழைக்கப்படுகின்ற விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கே தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நால்வரும் ஐக்கிய இராச்சியத்திற்கான பயணங்களை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், ஐக்கிய இராச்சியத்திற்குள் சொத்துக்களை சேகரித்து வைப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடைக்கு எதிரான கருத்துகள் முன்வைக்கத் தொடங்கப்பட்டு விட்டன. மே. 6ஆம் திகதியன்று இடம்பெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரச்சாரங்களின் இந்த பிரிட்டனின் தடை சூடுபிடிக்கும்.

நாட்டை காக்கும் வீரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, "இது பயங்கரவாதத்தின் சார்பாக செயல்படும் பல்வேறு குழுக்களின் அழுத்தத்தின் விளைவாகும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் செப்டெம்பர் மாதம் நடைபெறவல்ல 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தலை மையப்படுத்திய புதிய பிரேரணையைப் பிரித்தானியத் தலைமையிலான அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்படவுள்ளதாகப் பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ பசிபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மெல்லர் தெரிவித்திருந்த நிலையிலேயே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஐ.நா. மனித உரிமை பேரவையில் இருந்து இலங்கை விலக வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தியுள்ளார். எனினும், ஐ.நாவில் தாம் முகங்கொடுக்கவேண்டிய விடயங்களுக்கான தயாரிப்புகளை, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துவருவதாக அறியமுடிகின்றது.

எவ்வாறெனினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் பிரித்தானியாவின் தடை, ஐ.நா விவகாரம், பெரும் தாக்கத்தை செலுத்தாது என்றாலும், தேர்தல் பிரசார மேடைகளில் தொனிப்பொருளாக அமையும். இனவாதம் கக்கப்படும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், நாட்டை காத்த வீரர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என பிள்ளையார் சுழி போடப்பட்டுவிட்டது.

பிரித்தானியாவின் தடையால், மேலே குறிப்பிட்ட நால்வரும் பிரித்தானியாவுக்கு செல்லமுடியாது அவ்வளவுதான். ஆனால், தங்களுடைய இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதியையும், நிவாரணத்தையும் தேடிக்கொண்டிருக்கும் தமிழ்மக்கள், ஐ.நாவின் பிரேரணையின் ஊடாகவேனும் நீதிக்கிடைக்கும் என நம்பிக்கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மையாகும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டை தீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகிவிட முடியாது.

ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக!

மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஊரை ஏமாற்றும் ஆணைக்குழுக்கள்



எம்.எஸ்.எம்.ஐயூப்

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இருந்து இலங்கை விலக வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமை பேரவையிலிருந்து அமெரிக்கா விலகியமை இலங்கைக்கு சாதகமானது என்று இலங்கையில் பிரபல சட்டத்தரணி ஒருவரான பிரதீபா மஹாநாமஹேவா கூறியிருக்கிறார். இவ்விருவரினதும் கருத்துக்களின் அர்த்தமானது இலங்கை மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறத் தேவையில்லை என்பதாகும்.

இதில் ரணில் விக்ரமசிங்கவின் கருத்தை ஆராய்வது மிக முக்கியமானதாகும். ஒரு காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி இனவாதத்தைத் தூண்டி அரசியலில் ஈடுபட்டு வந்தன. ஸ்ரீல.சு.க. 1958ஆம் ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட போது, ஐ.தே.க. அதை வைத்து இனவாதத்தைத் தூண்டி அரசியல் இலாபம் தேட முயன்றது. பின்னர் 1966ஆம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தத்தை ஐ.தே.க. கைச்சாத்திட்ட போது, ஸ்ரீல.சு.க. இனவாதத்தைத் தூண்டி அரசியல் இலாபம் தேட முயன்றது.

ஆயினும், 2000ஆம் ஆண்டிலிருந்து ஐ.தே.க. சற்று முற்போக்குத் தன்மையைக் காட்டத் தொடங்கியது. 2002ஆம் ஆண்டு அக்கட்சி புலிகள் இயக்கத்துடன் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து இனப் பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றைத் தேடுவதென அவ்வியக்கத்துடன், உடன்பாட்டுக்கு வந்தது.

மஹிந்த ராஜபக்ஷ, 2005ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததை அடுத்து புலிகள் மீண்டும் போரை ஆரம்பித்ததன் காரணமாக அச்சமாதான திட்டம் சீர்குலைந்தது. 2015ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க மீண்டும் பிரதமராகப் பதவியேற்றார். அதன் பின்னர் அவர் மஹிந்த ராஜபக்ஷவை போல, ஐ.நா. மனித உரிமை பேரவையோடு முட்டி மோதாமல் இலங்கை தொடர்பாகப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளுக்கு இணை அனுசரணை வழங்கினார்.

இவ்வாறு முற்போக்காளர் போல் தம்மைக் காட்டிக் கொண்டவர் தான் இப்போது மனித உரிமைப் பேரவையில் இருந்து இலங்கை விலக வேண்டும் என்கிறார். கடந்த மாதம் 25ஆம் திகதியும் அவர் அதே கருத்தைப் படும் வகையில் பேசியிருந்தார். செப்டம்பர் மாதம் மனித உரிமைப் பேரவை இலங்கை தொடர்பாக மற்றுமொரு பிரேரணையை நிறைவேற்ற இருப்பதால் அரசாங்கமும் ஏனைய கட்சிகளும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று இளைஞர்கள் குழுவொன்றுடன் உரையாடும் போது அவர் கூறியிருந்தார்.

இவை ரணில் விக்ரமசிங்க தலைமை தாங்கும் ஐ.தே.கவின் அரசியல் அடித்தளம் கறைந்து செல்லும் நிலையில் வெளியிடும் கருத்துக்கள் என்றே கருத வேண்டியுள்ளது. 2015ஆம் ஆண்டு மீண்டும் பதவிக்கு வந்த ஐ.தே.க. 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் படு தோல்வியடைந்தது. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை அடுத்து அக்கட்சி பிளவுபட்டு கட்சியின் பெரும்பாலானவர்கள் கட்சியை விட்டு வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியை நிறுவினர்.

இதனையடுத்து, 2020ஆம் ஆண்டு ரணில் தலைமையில் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அக்கட்சி எந்த ஒரு மாவட்டத்திலிருந்தும் ஒரு ஆசனத்தையேனும் பெறவில்லை. தேசிய பட்டியல் மூலமாகவே ரணில் பாராளுமன்றத்துக்கு சென்றார். கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 22 இலட்சம் வாக்குகளைப் பெற்று அவர் மூன்றாம் இடத்துக்கு வந்த போதிலும் கடந்த நவம்பர் மாதம் ரணில் தலைமையில் சிலிண்டர் சின்னத்திலும் யானை சின்னத்திலும் போட்டியிட்டவர்கள் வெறும் 566,000 வாக்குகளை மட்டுமே பெற்றனர்.

இந்த நிலையில், தமது அரசியல் எதிர்காலமே இருள் மயமாக இருப்பதை கண்டு அவர் பெரும்பான்மை மக்களின் இன உணர்வை தமக்கு சாதகமாக்கிக்கொள்ள முயல்கிறார் போல் தான் தெரிகிறது.

அவர் மட்டுமல்லாது, கடந்த காலத்தில் பதவியில் இருந்த சகல தலைவர்களும் மனித உரிமை விடயத்தில், குறிப்பாக வடக்கு கிழக்கு போரின் போது, பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகள் விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்களையும் உலகத்தையும் ஏமாற்றுவதை நோக்கமாகக் கொண்டே செயல்பட்டுள்ளனர். மனித உரிமை விடயத்தில் அவ்வாட்சியாளர்கள் நியமித்த ஆணைக்குழுக்கள் அதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

வடக்கு, கிழக்கு பிரிவினைவாத போரின் போதும் மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டு கிளர்ச்சிகளின் போதும் பல்லாயிரக் கணக்கானோர் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அதேபோல, காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாகவே நாட்டில் கூடுதலான எண்ணிக்கையில் அதாவது ஒன்பது ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலத்திலேயே மிகவும் அதிகமானோர் காணாமல் போனார்கள். பெரும்பாலும் நாட்டின் தென் பகுதிகளிலேயே அவர்கள் காணாமல் போனார்கள். ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் 60,000க்கு மேற்பட்டோர் அவ்வாறு கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக சர்வதேச ரீதியில் பலர் குரல் எழுப்பவே பிரேமதாசவே காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்காக 1991ஆம் ஆண்டு ஆரம்பித்து மூன்று ஆணைக்குழுக்களை நியமித்தார். புலிகளின் தற்கொலை குண்டுதாரி ஒருவர் 1993ஆம் ஆண்டு பிரேமதாசவை கொலை செய்த பின் தற்காலிகமாக ஜனாதிபதி பதவிக்கு வந்த டி.பி.விஜேதுங்க அந்த மூன்று ஆணைக்குழுக்களையும் இரத்து செய்து தாம் மற்றொரு ஆணைக்குழுவை நியமித்தார்.

விஜேதுங்க சுமார் ஒன்றரை ஆண்டுகளே ஜனாதிபதியாக இருந்தார். அதன் பின்னர் 1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க காணாமற்போனோர் தொடர்பாக பிராந்திய ரீதியாக மூன்று ஆணைக்குழுக்களையும் 1998ஆம் ஆண்டு நாடு தழுவிய ரீதியில் மற்றொரு ஆணைக்குழுவை நியமித்தார். இந்நாட்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் பட்டலந்த ஆணைக்குழுவையும் அவரே நியமித்தார்.

ஆனால், இந்த ஆணைக்குழுக்களால் கிளர்ச்சிக்களாலும் போர்களாலும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக இரண்டு பொறிமுறைகள் உருவாக்கப்பட்டன. ஒன்று பரணகம ஆணைக்குழுவாகும். மற்றையது, இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணைக் குழுவாகும். பரணகம ஆணைக்குழுவுக்குக் காணாமல்போனோர் தொடர்பாக 19,000க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்தன. ஆனால், அப்பொறிமுறைகளாலும் காணாமல்போன எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் நெருக்குதல் காரணமாக நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் (*Office on Missing Persons-OMP*) என்ற நிரந்தர அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டது.

அண்மையில் ரணில் விக்ரமசிங்க அல்-ஜசீரா தொலைக் காட்சியுடன் நடத்திய நேர்காணலின் போது, இந்த அலுவலகத்தின் மூலம் காணாமல்போன எத்தனை பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு ரணில், 16 பேர் என்று பதிலளித்தார். இத்தனை ஆண்டு காலத்துக்கும் 16 பேர் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள் என்றால், அந்த நிறுவனத்தால் என்ன பலன் என்று தான் கேட்க வேண்டும்.

காணாமல்போனோர் விடயத்தில் மட்டுமல்லாது, ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அரசாங்கங்கள் ஆணைக்குழுக்களை நிறுவியுள்ளன. மனித உரிமை மீறல்களுக்கு நிதர்சனமாக விளங்கிய சர்வதேச ரீதியில் பிரசித்தி பெற்ற 15 சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்வதற்கென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2006ஆம் ஆண்டு உதலாகம ஆணைக்குழுவை நியமித்தார்.

அதன் செயற்பாடுகள் விமர்சனத்துக்கு உள்ளாகவே அவர் அந்த ஆணைக்குழுவுக்கு உதவுவதற்காகவென இந்திய முன்னாள் பிரதம நீதியரசர் பி.என்.பகவதியின் தலைமையில் சர்வதேச நிபுணர்கள் குழுவொன்றை அதே ஆண்டு நியமித்தார். சட்ட மா அதிபர் தமக்கு போதிய ஒத்துழைப்பை வழங்குவதில்லை என்று அந்த நிபுணர்கள் சில மாதங்களுக்குப் பின்னர் அதனை கை விட்டுச் சென்றனர். உதலாகம ஆணைக்குழுவாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கென 2010ஆம் ஆண்டு அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூன் குழுவொன்றை நியமித்தார். அது தமக்குப் பாதகமான முடிவுகளுக்கு வரும் என்று நினைத்த மஹிந்த உள்ளூரிலேயே மனித உரிமை மீறல்களை விசாரிப்போம் என்று கூறி, அவ்வாண்டே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தார்.

இலங்கையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ள கூடிய பரிந்துரைகளை செய்த ஒரே ஆணைக்குழு அதுவாகும். ஆனால், மஹிந்தவின் அரசாங்கம் அவற்றை அமுலாக்கவில்லை. எனவே, 2012ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையில் இலங்கை விடயத்தில் மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்ட முதலாவது பிரேரணையில் அந்த பரிந்துரைகளை அமுலாக்க வேண்டும் என்று மட்டுமே கூறப்பட்டது. ஆனால், மாறி மாறி வந்த அரசாங்கங்கள் அவற்றை அமுலாக்க முன்வரவில்லை.

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாகவும் மைத்திரிபால ஒரு ஆணைக்குழுவையும் ரணில் விக்ரமசிங்க இரண்டு ஆணைக்குழுக்களையும் நியமித்தனர். அவற்றால் என்ன நடந்தது என்பது சகலரும் அறிந்த விடயமாகும்.

ஊரையும் உலகையும் ஏமாற்ற நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுக்களுக்காக பொது மக்களின் பணத்தில் கோடிக்கணக்கு ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆயினும், மீறப்பட்ட மனித உரிமைகளைப் பற்றியோ அல்லது செலவிடப்பட்ட பல கோடி ரூபாய் பொதுப் பணத்தைப் பற்றியோ எந்தவொரு ஜனாதிபதியும் கவலையடைவதாகத் தெரியவில்லை.

## கடிதங்கள்

### 9 கிராமங்களின் பிரச்சினைகள்



பதுளை மாவட்டத்தின் வியலுவ தேர்தல் பிரிவில் உள்ள சொரணாதொட்டை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 9 கிராமங்களைச் சேர்ந்த மக்கள், வீதி பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உடகந்த, ஹிரிதலகல, எல்ஹென, இலுக்தென்ன, கட்டகேல்ல,ஏத்கால, பல்லேபதன, கிரிகல்லந்த மற்றும் பரஹேல் ஆராவ கிராமங்களில் வசிக்கும் மக்களே இவ்வாறான சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அரசியல்வாதிகள் பல ஆண்டுகளாக அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும், அதே ஏமாற்றம் இந்த முறையும் செய்யப்படுவதாகவும் பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.

இந்த வீதி, குட்டியகொல்லவிலிருந்து வெல்கெலே வரை நீண்டுள்ள போதும் உடகந்த சந்திப்பு வரை மட்டுமே தார் போடப்பட்டுள்ளது. அந்தப் பகுதியும் தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளது. எனவே, உடகந்த வரை இயக்கப்படும் ஒரே பேருந்தும் பெரும்பாலும் சேவையை நிறுத்துவதாகக் கிராம மக்கள் கூறுகின்றனர்.

உடகந்த சந்திக்கு அப்பால் உள்ள கிராமங்களுக்குச் செல்லும் பாதை சிறிதும் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

- பாலித்த ஆரியவங்ச




# அவிசாவளையில் பாபா காட்டிய அற்புதம்




அவிசாவளை பாபா, 2 பிரசாதங்களில் தனது 2 பாதத் தடங்களையும் பதித்து "நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று தம் அருளை வியாழக்கிழமை (20) அன்று வெளிக்காட்டினார்.

சென்னையிலிருந்து வருகை தந்துள்ள பாபாவின் பக்தை கிரிஜா அம்மா பாபாவுக்கு பிரசாதம் வழங்கியபோது, இந்த அற்புதம் நிகழ்ந்ததை அங்கிருந்த நூற்றுக்கணக்கான அடியவர்கள் கண்டு மெய்சிலிர்த்தார்கள்.

கிரிஜா அம்மா, மிகவும் எளிமையான, அன்பு மிகுந்த, ஆழ்ந்த சீரடி பாபா பக்தை. பாபாவின் ஆக்ஞையின் பேரில் இவர் தன்னலமில்லாத தொண்டுகள் பல மக அமைதியான முறையில் செய்து வருகிறார்.

அவரது வீட்டில் பாபா படத்திலிருந்து தொடர்ந்து கொட்டிக் கொண்டிருக்கும் உதிப்பிரசாதத்தின் மூலம் பலரது வியாதிகளும் குணமாகிறது. "அவிசாவளை பாபா தம்மை இலங்கை வருமாறு அழைத்ததால் நான் வந்தேன். அங்கு மிக அருமையான அதிர்வலைகளை நான் உணர்கிறேன். இனி இலங்கை பூமி மிகுந்த சிறப்புகளை அடையும். பாபா அறிவுறுத்திய நம்பிக்கை, பொறுமை இவற்றைக் கடைப்பிடித்து, உலகத்தின் ஆதி வைத்தியரான பாபாவின் உத்தியைப் பயன்படுத்தி நலமாகவும் மகிழ்வுடனும் இருங்கள். பாபாவின் சத்சரித்திரம் ஒரு பொக்கிஷம். அதைப் பாராயணம் செய்யச் செய்ய பற்பல நன்மைகளை அடையலாம்" என்று அவர் தம் ஆசியுரையில் கூறினார்.

அம்மாவை இலங்கை அழைத்து வந்திருக்கும் திருநெல்வேலி சீரடி சாயி கோவில் ஸ்தாபகர் மகேஷ் மற்றும் அவரது பாரியார் திருமதி பிரபா அவர்கள் பாபாவின் அருளாசி பெற்றவர்கள்.

பாபா சேவையில் இருக்கும் நல்ல அடியவர்கள். "பாபாவின் முன்னிலையில் அனைவரும் சரிசமம். எவ்வித ஏற்ற தாழ்வும் கிடையாது. பாபாவின் மேல் நாம் எவ்வித பலனையும் எதிர்பார்க்காத அன்பை வைத்தால் அவர் நம்மைக் கண்ணை இமை காப்பது போல காப்பார். அதை நாங்கள் அனுபவிக்கிறோம்" என்று அறுதியிட்டுக் கூறினார் மகேஷ்.

அவிசாவளை பாபா ஆசிரமத்தில் தற்போது மிக விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அகண்ட சோதியும், அகண்ட சாயிசத்சரித்தர சப்தாகம், மண்டல பாராயணமும் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி பூரணாகுதி ஹோமத்துடன் நிறைவு பெறும்.

# யாழில் 'சகஜ' யோகா அறிமுகம்



சகஜ யோகாவின் நிறுவனர் அருள்மிகு அன்னை ஸ்ரீ மாதாஜி நிர்மலா தேவியின் வாழ்க்கைப் பணியை கௌரவிக்கும் வகையில், சகஜ யோகா அறிமுகமும் ஆத்ம விழிப்புணர்வு (சுய உணர்தல்) வழங்கும் நிகழ்வுகள் சகஜ தொண்டர்களான Dr.K.பாஸ்கரன் (இந்தியா) ஸ்ரீமதி S.ரமணி (அமெரிக்கா) ஆகியோர் நடத்தும் இலவச தியான வகுப்புகள் யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் வெள்ளிகிழமை (28) மாலை 5 மணிமுதல் இரவு 8 மணி வரையும் நடைபெற உள்ளது.

ஸ்ரீ மாதாஜியின் வாழ்வு மனித குலத்திற்கு அர்பணிக்கப்பட்ட சிறந்த வாழ்வாகும். பல உலக நாடுகளுக்கு பயணம் செய்து மக்களுக்கு ஆத்ம விழிப்புணர்வை வழங்கி அவர்களுள் அமைதியை கொண்டுவர தன்னை அர்ப்பணித்தவர். அவரது போதனைகள் எப்போதும் இலவசமாகும்.

"நீங்கள் உங்கள் சொந்த குருவாக இருக்க வேண்டும்" என்பது சகஜ யோகாவின் அடிப்படையாகும், இன்று நூற்றுக்கு மேலான நாடுகளில் இலவசமாகக் கற்பிக்கப்படுகிறது.

ஸ்ரீ மாதாஜி 21 மார்ச், 1923இல் இந்திய மத்தியப் பிரதேசம், சிந்த்வாராவில் சாலிவாகன் வம்சத்தில் பிறந்தவர். சிறு வயதில், அவர் மகாத்மா காந்தியின் ஆசிரமத்தில் வாழ்ந்த காலத்தில் அவரது ஞானத்தாலும் முதிர்ச்சியாலும் காந்தியைக் கவர்ந்தார். ஸ்ரீ மாதாஜி லாகூரில் உள்ள மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் மற்றும் உளவியல் பயின்றார்.

1947இல்,இந்தியா சுதந்திரம் அடைவதற்கு சற்று முன்பு, இந்தியாவின் உயர்ந்த சேவை ஆளுநராக விளங்கிய சி.பி.ஸ்ரீவாஸ்தவா அவர்களை மணந்தார். ஓர் இல்லத்தரசியாகத் தாயாகக் குழந்தைகள், கணவன் என சாதாரண வாழ்வு வாழ்ந்ததோடு ஆழ்ந்த ஆன்மீக சமநிலையையும் வெளிப்படுத்தினார்.

தனக்குள் ஒரு தனித்துவமான ஆளுமை இருப்பதைச் சிறு வயதிலிருந்தே அறிந்ததோடு, என் நேரமும், மனிதகுலத்திற்கு உதவ சிறந்த வழியைத் தேடி சரியான தருணத்திற்காகவும் காத்திருந்தார்.

1970 ஆம் ஆண்டில் அவர் அனைவருக்கும் இலகுவான ஒரு ஆன்மீக தியானப் பயிற்சியை, சகஜா யோகாவை, அறிமுகப்படுத்தினார்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் ஒரு உள்ளார்ந்த ஆன்மீக ஆற்றலை விழிப்படையச் செய்வதன் மூலம், ஒவ்வொரு நபரும் மாற்றப்பட முடியும் என நிரூபித்தார். இது அனைவரின் பிறப்புரிமையாகும். தேடுவோருக்கு இலகுவாகிறது. சுய-உணர்தல் என்று விவரிக்கப்படும் இந்த விழிப்புணர்வைப் பெற்றுப் பயனடைந்த பல ஆயிரக்கணக்கான மக்களே இதற்கு சான்றாகும்.

சகஜ யோகா தியான பயிற்சியால் மன சோர்வு, மன அழுத்தம் குறைந்து உடல், மனம், உணர்வுகள் மற்றும் ஆன்மீக வாழ்வில் முழுமையான சமநிலை கிடைக்கிறது.

இதுவே ஆரோக்கியமான அமைதியான வாழ்வின் ஆரம்பமாகிறது. ஒருவரின் ஆளுமையிலும் சுற்றுப்புறச் சூழலிலும் மாற்றம் தெரிகிறது. சமூகவியல் பிரச்சினைகள் நீங்குகின்றன. போதைப்பொருள் பழக்கம், புகைபிடிப்பு, மது அருந்தும் பழக்கம் போன்றவை தானாகவே நீங்குகின்றன. மனநிம்மதி மற்றும் ஆனந்தம் நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்க முடிகிறது. பெற்றோர்கள், குழந்தைகள், மாணவர்கள் என அனைவரும் பயனடைகிறார்கள்.

ஸ்ரீ மாதாஜி தொடர்ந்து உலகம் முழுவதும் அயராது பயணம் செய்தார், உலகளவில் ஆயிரக்கணக்கான கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆத்ம விழிப்புணர்வை ஏற்படுத்தினார், நூறாயிரக்கணக்கான மக்களுக்கு சுய-உணர்தலின் உண்மையான அனுபவத்தை வழங்கினார், கிட்டத்தட்ட ஒவ்வொரு நாட்டிற்கும் விஜயம் செய்தார். இந்த விசேஷ அறிவை சிறியோர், பெரியோர், படித்தவர்கள், படியாதவர்கள் என அனைவருக்கும் பரிசாகக் வழங்கினார்.

சுய-உணர்தல் அனுபவத்திற்காகவோ அல்லது சகஜ யோகா தியானத்தை கற்பிப்பதற்காகவோ பணம் ஒருபோதும் வாங்கப்படுவதில்லை.

ஸ்ரீ மாதாஜியின் வழிகாட்டல், அறிவுரைகள், சகஜ யோகா நுட்பங்கள் ஆன்மீக ஆற்றலை எளிதாகவும், விரைவாகவும் செயல்படுத்தும் திறனையும் மற்றும் அதன் பலன்களை அனுபவிக்கும் திறனையும் அனைவருக்கும் தருகிறது - இது சகஜ யோகா தியானத்தின் தனித்துவமாகும்.

அவரின் தன்னலமற்ற பணி மற்றும்போ தனைகளுக்குப் பல நாடுகளிலும் மதிப்புமிக்க நிறுவனங்களாலும் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றார்.

சகஜ யோகா என்பது ஸ்ரீ மாதாஜி உலகிற்கு வழங்கிய ஒரு தனித்துவமான பரிசு. ஸ்ரீ மாதாஜியின் வாழ்க்கை, உலகளாவிய அமைதியைப் பரப்பும் தன்னலமற்ற பணி மற்றும் சகஜ யோகா பற்றிய மேலதிக தகவலுக்கு, https://shrimataji.org/ என்ற இணையத்தளத்தில் பார்வையிடவும்.

# 'நூறு மலர்கள் மலரட்டும்'

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 24 வது நிகழ்வு கோண்டாவில் இந்துக் கல்லூரியில், மார்ச் 28, 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை (28) மாலை 3.30 க்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் தொடக்க நிகழ்வாக வைரமுத்து திவ்வியராஜன் ஆக்கத்தில் உருவான 'ஒரு சின்ன கதை' பாகம் 2 மற்றும் 'சாவை தள்ளி வை' ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு, ஆசிரியரும் பட்டிமன்ற நடுவருமான த.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையினை ஜீவநதி சஞ்சிகை மற்றும் வெளியீட்டகத்தின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரனும், 'சாவை தள்ளி வை' நூல் தொடர்பான அறிமுக உரையை ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் தலைவர் வைத்திய நிபுணர் சி.சிவன்சுதனும், 'ஒரு சின்ன கதை' பாகம் 2 பற்றிய கருத்துரைகளை சட்டத்தரணி பசுபதி ஐங்கரன், ஓய்வு நிலை ஆசிரியர் விஜயா பீரிஸ், சி.மகாலிங்கம், அ.குணசிங்கம், வ.மோகநாதன், தேவ சபா அனுஜன், ஸ்ரீபாலன் சிந்துசன், மாதங்கி யாதவன், சசிகா நித்தியானந்தம், பகீரதன் நிரூசன் ஆகியோர், நிகழ்ச்சித் தொகுப்பை மாணவி தர்மிகா உமாசுத சர்மாவும் மேற்கொள்ளவுள்ளனர்.

விசேட கலை நிகழ்வுகளாக கனிஸ்ரனின் நெறியாள்கையில் கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலக மாணவர்களின் 'வெற்றி வெற்றி' இசைக் கூத்தும், செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் தயாரிப்பில் சீலனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'எங்கே எங்கே குடை எங்கே?', 'எலியார் எங்கே போனார்?' ஆகிய சிறுவர் நாடகங்களும் இடம்பெறவுள்ளன.

மேலும் இந் நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி (28), ஞாயிறு (29) ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

- எஸ். தில்லைநாதன்

### கடந்த 3 ஆண்டுகள் இடம்பெற்ற பகிடிவதையால்
# 51 மாணவர்கள் பலி

இந்தியா

இந்தியாவில், கடந்த 3 ஆண்டுகளில், பகிடிவதை காரணமாக, 51 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். கல்விச் சமூகத்துக்கு எதிரான வன்முறை (சேவ்) என்ற அமைப்பு, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிடிவதை கொடுமைகள் பற்றிய புள்ளி விவரங்களை சேகரித்து வெளியிடுகிறது.

அவர்கள் தற்போது 2022 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலத்தில் கல்வி மையங்களில் நடந்த பகிடிவதை நிகழ்வுகள் குறித்து பட்டியலிட்டு உள்ளனர்.

அதில், தேசிய அளவில் பகிடிவதை கொடுமைக்கு எதிரான உதவி எண்ணில் 3 ஆயிரத்து 156 புகார்கள் பதிவாகி உள்ளன. அதில் 1,946 கல்லூரிகளின் பெயர்கள் இந்த புகாரில் சம்பந்தப்பட்டு உள்ளது. அவற்றில் பல கல்லூரிகள் மிகவும் பிரபலமான கல்வி மையங்களாகும். உதவி எண் அல்லாமல் கல்லூரி அளவில் இன்னும் அதிகமான புகார்கள் பதிவாகி இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவான புகார்களில் மருத்துவக் கல்லூரிகளில்



38.6 சதவீத ராகிங் நடந்ததாகத் தெரியவந்துள்ளது.

அவற்றில் 35.4 சதவீதம் தீவிர நடவடிக்கை புகார்களாகும். இந்த 3 ஆண்டுகளில் 51 மாணவ மாணவிகள் பகிடிவதை கொடுமைக்குப் பலியாகி உள்ளனர்.

1.1 சதவீத மாணவர்களே இந்த பகிடிவதை குற்றத்தில் சம்பந்தப்பட்டுள்ளனர். இது கோடா பயிற்சி மைய நகரில் தற்கொலை செய்து கொண்ட 57 மாணவர்கள் எண்ணிக்கைக்கு நிகராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.




அமெரிக்கா

### Gold Card Visa:
## ஒரே நாளில் 1,000 அட்டைகள் விற்பனை

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்த கோல்ட் கார்ட் விசா திட்டத்தின் கீழ் ஒரேநாளில் ஆயிரம் கோல்ட் கார்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும் கோல்ட் கார்ட் வாங்குவதற்காக பலர் ஆர்வம் காட்டி வருகிறார்கள். அவர்கள் வரிசையில் நிற்கிறார்கள்.

இதன் மூலம் கிரீன் கார்ட் வைத்திருப்பது போன்று கோல்ட் கார்டும் பயனுள்ளதாக இருக்கும். இது அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெற்றதற்கு சமம். இத்திட்டம் மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது.

இந்த திட்டம் 2 வாரங்களில் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்படும். இதற்கான மென்பொருளை எலான் மஸ்க் உருவாக்கி வருகிறார்.

5 மில்லியன் டொலர்களை செலுத்துவதன் மூலம் அமெரிக்காவில் காலவரையின்றி, அவர்கள் விரும்பும் எந்த நேரத்திலும் இருக்க உரிமை உண்டு. அவர்களது பின்புலம் சரிபார்க்கப்படுகிறது.

அவர்கள் தீயவர்களாகவோ அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாகவோ இருந்தால் அமெரிக்கா எப்போதும் அதை இரத்து செய்யலாம்.

நியூசிலாந்து

## நியூசிலாந்தில் நிலநடுக்கம்

நியூசிலாந்து நாட்டின் கீழ் தெற்கு தீவில், செவ்வாய்க்கிழமை(25) அதிகாலை 5.30 மணியளவில் (இலங்கை நேரப்படி) நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தெற்கு தீவில் கடலுக்கு அடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 7ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.


இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

நிலநடுக்கத்தால் திடீரென வீடுகள் குலுங்கியதாகவும், வீட்டில் உள்ள பொருட்கள் அதிர்ந்தன என்றும், இதனால் அச்சமடைந்து வீட்டைவிட்டு வெளியேறியதாகவும் அங்குள்ள மக்கள் கூறியுள்ளனர்.

நியூசிலாந்தின் தெற்கு தீவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் அங்குள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தால், பாதிப்பு எதுவும் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை.

ஏற்கெனவே நியூசிலாந்தின் கெர்மடெக் தீவில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. இது ரிக்டர் அளவுகோலில் 7.2ஆக பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




அமெரிக்கா

## கேளிக்கை விடுதியில் துப்பாக்கிச் சூடு

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டன் நகரில் உள்ள இரவு நேரக் கேளிக்கை விடுதி ஒன்றில், செவ்வாய்க்கிழமை(25) அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், அறுவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விடுதியில், விடுமுறையை முன்னிட்டு சிறப்பு இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியின்போது இருதரப்பினருக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த வாக்குவாதம் முற்றியதில் ஆத்திரம் அடைந்த ஒரு தரப்பினர் அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனைக் கண்ட



அங்கிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடினர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் படுகாயமடைந்தனர். அத்துடன், சந்தேக நபர்கள், அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

காயமடைந்தவர்களில், 4 பேரின் நிலை ஆபத்தான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்து

### போர் நிறுத்தத்திற்கான
## புதிய பரிந்துரையை வழங்கிய எகிப்து

போர் நிறுத்தத்திற்கான புதிய பரிந்துரையை எகிப்து வழங்கியுள்ளது.

எகிப்து தனது பரிந்துரையில், “ஹமாஸ் உயிரோடுள்ள ஐந்து பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும். அதில் அமெரிக்க-இஸ்ரேல் பணயக் கைதியுடன் அடங்குவார். அதற்குப் பதிலாக இஸ்ரேல் காசா முனைக்கு மனிதாபிமான



உதவிகளைச் சென்றடைய அனுமதிக்க வேண்டும். சில வாரங்கள் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். இஸ்ரேல் சிறையில் உள்ள நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்களை விடுதலை செய்ய வேண்டும்” குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த போர் நிறுத்த பரிந்துரையை இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு ஏற்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# ஐ.பி.எல்: சுப்பர் ஜையன்ட்ஸை வென்ற கப்பிட்டல்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), விசாகப்பட்டினத்தில் திங்கட்கிழமை (24) நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: டெல்லி

லக்னோ: 209/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிக்கலஸ் பூரான் 75 (30), மிற்செல் மார்ஷ் 72 (36), டேவிட் மில்லர் ஆ.இ 27 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/42 [4], குல்தீப் யாதவ் 2/20 [4], அக்ஸர் பட்டேல் 0/18 [3])

டெல்லி: 211/9 (19.3 ஓவ.) (துடுப்பாட்டம்: அஷுதோஷ் ஷர்மா ஆ.இ 66 (31), விப்ராஜ் நிகம் 39 (15), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 34 (22), பப் டு பிளெஸி 29 (18), அக்ஸர் பட்டேல் 22 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிக்வேஷ் ரதி 2/31 [4], ஷர்துல் தாக்கூர் 2/19 [2], மணிமாறன் சித்தார்த் 2/39 [4])

போட்டியின் நாயகன்: அஷுதோஷ் ஷர்மா.

இந்நிலையில், குவஹாத்தியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



### ஒப்பந்த நிபந்தனைகளுக்கு
## இணங்கிய அர்னோல்ட்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டுடன் ஐந்தாண்டு ஒப்பந்தமொன்றுக்கான நிபந்தனைகளை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் பின்களவீரரான ட்ரென்ட் அலெக்ஸான்டர் அர்னோல்ட் இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2016ஆம் ஆண்டு லிவர்பூலில் இணைந்த 26 வயதான ட்ரென்ட் அலெக்ஸான்டர் அர்னோல்டின் அக்கழகத்துடனான ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மட்ரிட்டுடன் ட்ரென்ட் அலெக்ஸான்டர்-அர்னோல்ட் கைச்சாத்திடப்படும்போதும் குறிப்பிட்டளவு தொகை வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.



## போட்டியின்போது தமிமுக்கு மாரடைப்பு

பங்களாதேஷின் சவாரில் நடைபெற்ற டாக்கா பிறீமியர் பிரிவு கிரிக்கெட் லீக் போட்டியொன்றின்போது பங்களாதேஷின் முன்னாள் அணித்தலைவர் தமிம் இக்பாலுக்கு மாரடைப்பொன்று ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து தமிமுக்கு இரத்தக்குழாய் சீரமைப்பு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (24) மேற்கொள்ளப்பட்ட அவசர சத்திர சிகிச்சையொன்றைத் தொடர்ந்து தமிம் மீள நினைவுக்கு வந்ததாகவும், குடும்ப உறுப்பினரொருவருடன் கதைத்ததாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மொஹம்மெடான் ஸ்போர்ட்டிங் கழகத்துக்குத் தலைமை தாங்கிய தமிம், போட்டியின் முதலாவது இனிங்ஸில் ஒரு ஓவர் மாத்திரமே களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தனர்.

முதல் வைத்தியசாலைக்குச் சென்ற தமிம், வைத்தியர்கள் அறிவுறுத்தியபோதும் மீண்டும் மைதானத்துக்கு திரும்பியிருந்தார்.

### பி.எஸ்.எல்:
## கராச்சி கிங்ஸின் அணித்தலைவராக வோர்னர்

பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் 10ஆவது பருவகாலத் தொடரில் கராச்சி கிங்ஸ் அணிக்கு அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் டேவிட் வோர்னர் தலைமை தாங்கவுள்ளார். கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற வீரர் தெரிவின்போது அவ்வணியால் முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட வோர்னர், ஷண் மசூட்டை அணித்தலைவராகப் பிரதியிட்டுள்ளார்.

பந்தைச் சேதப்படுத்திய 2018ஆம் ஆண்டு பிரச்சினையைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியால் அணித்தலைவராவதற்கு விதிக்கப்பட்ட வாழ்நாட் தடை கடந்தாண்டே நீக்கப்பட்டு பிக் பாஷ் லீக்கில் சிட்னி தண்டர்ஸுக்கு தலைமை தாங்கியிருந்தார்.



### பாகிஸ்தானுக்கெதிரான தொடருக்கான
## நியூசிலாந்துக் குழாமில் வில்லியம்சன் இல்லை

பாகிஸ்தானுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான நியூசிலாந்துக் குழாமில் தன்னைக் கருத்திற் கொள்ள வேண்டாமென கேன் வில்லியம்சன் கேட்டுக் கொண்ட நிலையில் அவர் குழாமில் தெரிவு செய்யப்படவில்லை.

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) பங்கேற்பதன் காரணமாக றஷின் றவீந்திர, மிற்செல் சான்ட்னெர், கிளென் பிலிப்ஸ், டெவோன் கொன்வே, லொக்கி பெர்கியூசன் ஆகியோர் குழாமில் தெரிவு செய்யப்படவில்லை.

காயங்களிலிருந்து குணமடைவதன் காரணமாக மற் ஹென்றியும், பணிச்சுமை நிர்வாகம் காரணமாக கைல் ஜேமிஸனும் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: டொம் லேதம் (அணித்தலைவர், விக்கெட் காப்பாளர்), முஹமட் அப்பாஸ், ஆதித்யா அஷோக், மிஷெல் பிறேஸ்வெல், மார்க் சப்மன், ஜேக்கப் டஃபி, மிற்ச் ஹே (விக்கெட் காப்பாளர்), நிக் கெல்லி, டரைல் மிற்செல், வில் ஓ ருர்க், பென் சியர்ஸ், நாதன் ஸ்மித், வில் யங்க்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 26, மார்ச் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது